தங்க மகளுக்குத்
தந்தையெந்தன் தாலாட்டு
பாலருந்தும் கண்மணியே
பசியாறிக் கண்ணுறங்கு
முத்தங் கொடுத்தவளோ
முத்தான உந்தன் தாய்
பேறு பெற்றவளாம்
பெற்றெடுத்தாள் உன்னையிங்கு
ஆராரோ ஆரிராரோ
ஆராரோ ஆரிராரோ
அம்புலியும் வந்தானே
அம்ம நீயும் கண்ணுறங்கு
அரசாள வந்தவளே
ஆடிப்பாடிக் கண்ணுறங்கு
வேழ முகத்தானும்
வெற்றிகளைத் தந்திடுவான்
வேணியென வந்தவளே
வெற்றிபெறக் கண்ணுறங்கு
ஆராரோ ஆரிராரோ
ஆராரோ ஆரிராரோ
ஆறு முகத்தானும்
ஆறுதலைத் தந்திடுவான்
ஆணையிட வந்தவளே
அழகாக நீயுறங்கு
கந்தனுக்குப் பின் பிறந்த
கருப்பனிங்கு வந்தானோ?
கலங்காதே கலையழகே
காத்திடுவான் கலையுனையே...
ஆராரோ ஆரிராரோ
ஆராரோ ஆரிராரோ
காலெல்லாம் நோகுமின்னு
காட்டுவழிப் போகலியே..
கந்தசாமிக் கண்மணியே
கலைவளர்க்கக் கண்ணுறங்கு...
கற்றுக் கொடுப்பவளோ

கருத்தாளும் உந்தன் தாய்
கண்ணிரண்டில் நீரெதற்கு
கண்ணுறங்கு கண்ணுறங்கு
ஆராரோ ஆரிராரோ
ஆராரோ ஆரிராரோ
அபிராமி தந்த செல்வம்
அரசாள வந்த செல்வம்
ஆருமடிக்கலியே...
ஆனாலும் அழுவதென்ன?
தங்கத் தொட்டிலிலே
தாலாட்ட வழியுமில்ல..
தந்தை நானும் தாலாட்ட
தங்கமே நீ கண்ணுறங்கு....
ஆராரோ ஆரிராரோ
ஆராரோ ஆரிராரோ